செய்தி வெளியீடு எண்: 962 நாள்: 28.12.2018

<u>செய்தி வெளியீடு</u>

## <u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோரியவாறு 2019 ஆம் ஆண்டிற்கான அரைவைக் கொப்பரைத் தேங்காய்க்கான குறைந்த பட்ச ஆதரவு விலையை கிலோவிற்கு ரூ.95.21/– என மத்திய அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்தது தொடர்பான செய்திக்குறிப்பு</u>

தமிழ்நாடு தென்னை விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, அரைவைக் கொப்பரைத் தேங்காயின் குறைந்த பட்ச ஆதரவு விலையினை கிலோவிற்கு ரூ.75.11 லிருந்து ரூ.105 ஆக உயர்த்தி நிர்ணயித்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசினை கேட்டுக்கொண்டதற்கிணங்க, 2019 ஆம் கொப்பரை பருவத்திற்கான அரைவைக் கொப்பரைத் தேங்காயின் குறைந்த பட்ச ஆதரவு விலையினை கிலோவிற்கு ரூ.95.21 ஆக உயர்த்துவதற்கு மத்திய அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**